# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# தாவீது
## ராஜா (பாகம் 2)

எழுதியவர்: Edward Hughes
சித்தரிப்பவர்: Lazarus
மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர்: Ruth Klassen

**கதைகள்** 60 **ல்** 21

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*

உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

Tamil

இஸ்ரவேலின் தெற்கு பகுதியான, யூதாவின் மேல் தாவீது ராஜாவாய் இருந்தான். ஆனால், மீதமுள்ள இஸ்ரவேல் சவுலின் குமாரனாகிய, இஸ்போசேத்தை ராஜாவாக ஏற்றுக்கொண்டார்கள்.



1

ஏழு வருடத்திற்கு உள்நாட்டுப்போர் நடந்தது. ஆனால் தாவீதோ பலத்தின் மேல் பலம் பெற்றான்.



2

கடைசியாக ராஜா இஸ்போசேத் அவனுடைய இரண்டு போர்சேவகர்களால் கொல்லப்பட்டான்.



3

பின்பு இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரங்களும் சேர்ந்து வந்து தாவீதை இஸ்ரவேலின் மீது ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள். கடைசியாக, இறுதியில் நாடு முழுமைக்கும் ராஜாவானான்.



4

தாவீது செய்த முதல் காரியம் என்னவென்றால் எருசலேமை கைப்பற்றினான். அது தாவீதின் பட்டணம் என்று அறியப்பட்டது. அவன் அதை சத்துருக்களுக்கு எதிராக பலமாக திரும்பக் கட்டினான்.



5

எருசலேமிலிருந்து, தாவீதின் படையானது பெலிஸ்தியரையும் மற்றும் இஸ்ரவேலின் எதிராளிகளையும் வெற்றி பெறச்செய்தது.



6



அடுத்தப்படியாக, தாவீது ராஜா உடன்படிக்கை பெட்டியை எருசலேமுக்கு கொண்டு வந்தான். அந்த உடன்படிக்கை பெட்டியில் பத்துக் கற்பனைகளின் பிரதியும் மற்றும் மோசேக்கு தேவன் கொடுத்த மற்ற கற்பனைகளும் காணப்பட்டன.

7



தேவன் பரிசுத்தமானவர் என்றும், அதற்கு கீழ்ப்படிய வேண்டுமென்றும் உடன்படிக்கை பெட்டி இஸ்ரவேலருக்கு ஞாபகப்படுத்தியது.

8


தாவீது அரசாட்சி செய்த முதல் சில வருடங்கள் பல போர்களில் சண்டையிடவேண்டியதாயிற்று. அவன் ஒரு புத்தியுள்ள போர்ச்சேவகன் மற்றும் தாழ்மையுள்ள மனிதனாய் தேவனிடத்தில் வழிகாட்டுதலுக்காக வேண்டுதல் செய்தான்.
9


உடன்படிக்கை பெட்டியானது கூடாரத்தில் இருக்கையில், தான் ஒரு நல்ல வீட்டில் வாழ்வது தாவீதுக்கு ஒரு உறுத்தலாகவே இருந்தது.
10


தாவீது ஒரு தேவாலயத்தைக் கட்ட தீர்மானம் பண்ணினான். தேவனுடைய தீர்க்கதரிசியான, நாத்தான், அதின்படி செய்ய சொன்னான்.
11


அன்று இரவு, தேவன் தாவீதுக்கு ஒரு செய்தியை அனுப்பினார்: "என் தாசனாகிய தாவீது, தேவன் உனக்கு ஒரு வீட்டை கட்டுவார். உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும் போது, நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்ஜியத்தை நிலைப்படுத்துவேன்.
12


அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தை கட்டுவான்; அவன் ராஜ்ஜியபாரத்தின் சிங்காசனத்தை என்றெற்றைக்கும் நிலைக்க பண்ணுவேன்."
13


சவுலின் வீட்டில் யாராவது உயிர் பிழைத்தவர்கள் இருந்தால் அவர்களுக்கு உதவி செய்ய தாவீது விருப்பப்பட்டான். முடவனான, யோனத்தானின் குமாரன், மேவிபோசேத் ஒருவன் மாத்திரம் இருந்தான்.
14


"அவன் என்னோடு பந்தியில் மற்ற ராஜகுமாரர்கள் போல்
அப்பம் புசிப்பான்," என்று தாவீது கூறினான். தாவீது மேவ
ிபோசேத்திற்கு கருணை காண்பித்தான்.
ஏனெனில் யோனத்தான்
அவனுடைய சிறந்த
சிநேகிதனாக
இருந்தான்.
15


தாவீது தேவனை நம்பி,
அவருக்கு கீழ்ப்படியும்
நாளெல்லாம், தேவன் தாவீதுக்கு
உதவி செய்து வளர்ச்சியடைய
செய்தார். ஆனால் ஒரு நாள்,
தாவீது வாழ்க்கையில் ஒரு
கொடூரமான காரியம் நடந்தது.
தன்னுடைய படையை போருக்கு
அனுப்பிவிட்டு. அவன்
எருசலேமில் தங்கியிருந்தான்.
16


ஒரு இரவு, அவனால்
தூங்கமுடியவில்லை.
ஆகையால் மேல் மாடிக்கு
சென்று உலாவிக்கொண்டு,
பட்டணத்தை நோக்கிப்
பார்த்தான்.
17


ஒரு அழகான பெண் குளிப்பதை
தாவீது பார்த்தான். அவளுடைய
பெயர் பத்சேபாள். உரியா,
தாவீதுடைய ஒரு திடகாத்திர
போர்ச்சேவகனாயிருந்தும்,
அவனுடைய மனைவியாகிய
பத்சேபாளுடன் பாவம் செய்தான்.
18


பின்பு பத்சேபாள் ஒரு பிள்ளையை
உமக்குப் பெறப்போகிறேன் என்று
சொல்லி அனுப்பினபோது,
தன்னுடைய பாவம் தொல்லை
கொடுக்கப்போகிறது என்று
தாவீது உணர்ந்தான்.
19


தேவனிடத்தில் அறிக்கை செய்வதற்கு பதிலாக,
தாவீது தன்னுடைய பாவத்தை மறைக்கப்பார்த்தான்.
அது ஒரு போதும் நடக்காது! போர்க்களத்திலிருந்து
உரியாவை வீட்டிற்கு போகச்சொன்னான், உரியா குழந்தை
தன்னுடையது என்று யோசித்துக்கொள்ளுவான்
என்று தாவீது நினைத்தான்.
20



ஆனால் உரியாவோ, தன்னுடைய சகப் போர்ச்சேவகர்கள் போர்க்களத்தில் இருக்கும் போது வீட்டிற்கு செல்ல மறுத்தான். தாவீது வீட்டின் வாசலில் உரியா படுத்திருந்தான்.

21

ஆகையால் தாவீது மற்றுமொரு தீயக்காரியத்தை செய்தான். ஒரு கடிதத்தை கொடுத்து உரியாவை திரும்பவும் போர்க்களத்திற்கு அனுப்பினான்.



22

அந்த கடிதத்தில் போர்தளபதியிடம் உரியாவை போரில் மடிய செய்ய எழுதியிருந்தது. உரியா கொல்லப்பட்டபோது, தாவீது பத்சேபாளை தன்னுடைய மனைவியாக எடுத்துக் கொண்டான்.



23

தாவீதுக்கு அவனுடைய பாவத்தைக் காண்பிக்க, தேவன் தன்னுடைய தாசனாகிய நாத்தானை அனுப்பினார். நாத்தான் தாவீதுக்கு ஒரு பணக்காரன் மற்றும் ஏழ்மையான மனிதனை பற்றி கதை சொன்னான். பணக்காரனுக்கு நூற்றுக்கணக்கான ஆடுகள் இருந்தன, ஏழைக்கோ ஒரு ஆட்டுக்குட்டி மாத்திரம் இருந்தது மற்றும் அவன் அதை தன்னுடைய குமாரத்தி போல் பாதுகாத்தான்.



24

பிரயாணமாக ஒருவன் பணக்காரன் வீட்டிற்கு வந்தபோது, பணக்காரன் அந்த வழிப்போக்கனுக்கு தன்னுடைய ஒரு ஆட்டை உணவிற்காக அடிக்கவில்லை. பதிலாக, அந்த எளிய மனிதனின் ஆட்டுக்குட்டியை கொலை செய்தான்.



25

தாவீது அந்த பணக்காரனின் சுய நலத்திற்காக அவன் மேல் கோபப்பட்டான். "அதைச் செய்த மனிதன் நிச்சயமாகவே சாக வேண்டும்,' அவன் கத்தினான்."



26













தாவீது ராஜா (பாகம் 2)

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

2 சாமுவேல் 1-12

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.